| O.S.No. 124/2024 | PW1: திரு. சிவராஜ்<br>த/பெ. திரு. சுப்பிரமணியன் | 22-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனது சொந்த ஊர் மேல்மா. 2018–க்கு முன்னர் வந்தவாசியில் இருந்தேன். 2018–ல் காலி மனை வாங்கியதற்கு பின்னர்தான் மேல்மாவிற்கு வந்தேன், அதற்கு முன்பு வந்துபோய்க்கொண்டிருந்தேன். நான் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றேன். நான் நல்ல உலக அறிவு, படிப்பறிவு உள்ளவர் என்றால் சரிதான். நான் தாவா இடத்தினை அருண்குமாரிடம் காலிமனையாக வாங்கினேன். அந்த காலி மனையானது பிரதிவாதியின் தந்தை அனுபவித்து வந்த இடத்திற்கு பக்கத்தில் உள்ள இடம் என்றால் சரிதான்.

2. நான் கிரையம் வாங்கும்போது பிரதிவாதி இடத்தில் பழைய தட்டோடு இருந்தது. நான் கிரையம் வாங்கும்போது பிரதிவாதியின் இடத்தில் பிரதிவாதிதான் இருந்தார். நான் அருண்குமாரிடம் சொத்தினை கிரையம் வாங்கும்போது சொத்தினை பார்த்து, ஆவணங்களை பார்த்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். தாவா இடத்தினை அளந்ததற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் போட்டுள்ளீர்களா என்றால் இல்லை. நான் 22 அடி அகலம், 72 அடி நீளமுள்ள வீட்டினை கட்டி முடித்து அதில் அனுபவித்து வருகிறேன். பிரதிவாதி அவருடைய வீட்டினை தகர சீட்டு போட்டு அனுபவித்து வருகிறார், நான் அதனை போய் தடுத்தேன். பிரதிவாதி அவருடைய வீட்டு சுவற்றின் மீதுதான் தகர சீட்டு போட்டுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை கணக்கு பிள்ளை என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதியின் வீட்டினை அவரது தந்தை அனுபவித்து வந்து அவருக்கு பிறகு பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, 2018–க்கு பிறகுதான் தெரியும்.

3. நான் ஏற்கனவே இருந்த இடத்தில் வீடு கட்டுவதற்கு முன்பாக 4 முறை அளந்தேன். மணிகாரர் பிரபாகர், சர்வேயர் ஆகியோர் சேர்ந்து என்னுடைய இடத்தை மேற்கு பக்கமாக உள்ள நத்தம் புறம்போக்கில் தள்ளி அளந்துகொடுத்துவிட்டார்கள். 5-வது முறை அளக்கும்போதுதான் நத்தம் புறம்போக்கு என தெரிந்தது. மாவட்ட சர்வேயர் அளக்கும்போது நான் வீடு கட்டி முடித்துவிட்டேன்.

4. நான் என் வீட்டில் கட்டியுள்ள ஜன்னல் லேப்ட் பிரதிவாதியின் இடத்தில் வருகிறது என்றால் இல்லை. என்னுடைய மனையின் மொத்த சதுரம் 22 x 119½ ஆகும். அருண்குமாரிடமிருந்து வாங்கிய வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் கிழக்கு மேற்கு இருபுறமும் 22 அடி, வடக்கு தெற்கு இருபுறமும் 102 அடி என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில் தவறாக எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்தில் கிழக்கு மேற்கு இருபுறமும் 22 அடி, வடக்கு தெற்கு இருபுறமும் 17 அடி ஆக மொத்தம் 324 சதுர அடி கொண்ட காலி மனை என்று உள்ளது என்றால் சரிதான். பிழை திருத்தல் பத்திரம் எதுவும் எழுதி வாங்கவில்லை, ஆனால் வேறு பத்திரம் எழுதி வாங்கினோம்.

5. நான் 2018-ல் கிரையம் வாங்கி 2021-ல் வீடு கட்டினேன். நான் என்ன பரிகோரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய மனை 5 அடி அகலம், 119 அடி நீளம் பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியின் சொத்து பூர்வீக சொத்துதான். பிரதிவாதி நான் கிரையம் வாங்கியதற்கு முன்னரே அவருடைய இடத்தில் வீடு கட்டியிருந்தார். நான் எனது தாவா சொத்து விவரத்தில் கிழக்கு மேற்கு 22 அடி, வடக்கு தெற்கு 119 அடி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கிழக்கு மேற்கு 22 அடி, வடக்கு

தெற்கு 119 அடி கொண்ட அளவு மனை என்னுடைய அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரிதான்.

6. நானும், எனது மனைவியும் சேர்ந்து பிரதிவாதியின் கொய்யா மரங்கள், வாழை மரங்கள் ஆகியவற்றை வெட்டி சேதப்படுத்தியதாக பிரதிவாதியின் மனைவி என் மீது வந்தவாசி வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது பொய்யான புகார் ஆகும். புகாரில் நடந்த விசாரணையில் நாங்கள் செய்தது தவறு என்றும், இனிமேல் அதுபோல் செய்யமாட்டோம் என்று காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்துவிட்டு வந்தோம் என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டிற்கு பின்னரும், பிரதிவாதியின் வீட்டிற்கு பின்னரும் காலி மனைகள் உள்ளது என்றாலும், அதில் வாழை மரங்கள், கொய்யா மரங்கள் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. மீண்டும், 25.08.2024 அன்று இரவு நேரத்தில் நானும் எனது மனைவியும் பிரதிவாதியின் இடத்தில் உள்ள மரங்களை வெட்டியதனை பிரதிவாதியின் மனைவி கேட்டதால் அவரை கொலை மிரட்டல் விடுத்தது சம்மந்தமாக புகார் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு வந்தவாசி போலீசார் இடத்தை பார்வையிட்டார். அவ்வாறு போலீசார் பார்வையிட்டபோது எங்களது ACயிலிருந்து வெளியேறும் தண்ணீர் பிரதிவாதியின் இடத்தை சேதப்படுத்தியிருந்ததை பார்த்தார் என்றால் வந்து பார்த்தார், ஆனால் அவ்வாறு இல்லை. அதன்பிறகு, நாங்கள் காவல் நிலையம் சென்று இதுபோல் தவறு செய்யமாட்டோம் என்று எழுதிக்கொடுத்துவிட்டு வந்தோம் என்றால் சரியல்ல.

8. நான் என் இடத்தை அனுபவித்து வருகிறேன் என்றாலும், பிரதிவாதி அவரது இடத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும், நான்

பெரும்பாண்மை சமூகத்தை சார்ந்தவர் என்பதால், சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த பிரதிவாதிக்கு எதிராக பிரச்சனை செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி 5 அடி இடத்தினை ஆக்கிரமித்து வீடு கட்டியிருந்தால் நான் வீடு கட்டுதவற்கு முன்பாக அளந்து வீடு கட்டியிருப்பேன் என்றாலும், வழக்கிற்காக பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வருவாய் துறை அலுவலர் மீது புகார் கொடுத்தற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நான் பொய்யான தகவல்களை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும், நான் பொய்யான சங்கதிகளைக் கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.22 17:42:27 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**